Wed, 05 Jul-17; Daily Thanthi - Chennai; Size : 182  sq.cm.; Page : 14

# பங்குச்சந்தை துளிகள்

★ **ஸ்ரீ சிமெண்ட்** பங்குகளை படிப்படியாக வாங்கிச் சேர்க்கலாம் என ஐ.ஐ.எப்.எல். இன்ஸ்டிடியூஷனல் ஈக்விட்டீஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த பங்கிற்கான எதிர்கால இலக்கு ரூ.18,500–ஆக நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. மும்பை பங்குச்சந்தையில், செவ்வாய்க்கிழமை வர்த்தகத்தின் இறுதியில் இப்பங்கின் விலை ரூ.17,680–ல் நிலைகொண்டது. முந்தைய நாளுடன் ஒப்பிடும்போது இது 0.47 சதவீத ஏற்றமாகும்.

★ **இந்திரபிரஸ்தா காஸ்** நிறுவனப் பங்குகளைப் வாங்கலாம் என ஈடல்வைஸ் செக்யூரிட்டீஸ் நிறுவனம் கூறி உள்ளது. இந்த பங்கிற்கான எதிர்கால இலக்கு ரூ.1,251–ஆக நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. மும்பை சந்தையில் இப்பங்கின் விலை, செவ்வாய்க்கிழமை அன்று ரூ.1,063–ல் நிலைகொண்டது. திங்கள்கிழமை இறுதி நிலவரத்துடன் ஒப்பிடும்போது இது 0.96 சதவீதம் உயர்வாகும்.

★ **ஹேவல்ஸ் இந்தியா** பங்குகளை வாங்கவும் வேண்டாம், விற்கவும் வேண்டாம் என எம்.கே. குளோபல் பைனான்சியல் சர்வீசஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த பங்கிற்கான எதிர்கால இலக்கு ரூ.440–ஆக நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. மும்பை சந்தையில், செவ்வாய்க்கிழமை வர்த்தகத்தின் இறுதியில் இப்பங்கின் விலை 0.62 சதவீதம் குறைந்து ரூ.461.80–ல் நிலைகொண்டது.

★ **குஜராத் ஸ்டேட் பெட்ரோநெட்** நிறுவனப் பங்குகளை வாங்கலாம் என பிலிப் கேப்பிட்டல் நிறுவனம் கூறி உள்ளது. இந்த பங்கிற்கான எதிர்கால இலக்கு ரூ.200–ஆக நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. மும்பை சந்தையில் இப்பங்கின் விலை, செவ்வாய்க்கிழமை வர்த்தகத்தின் இறுதியில் ரூ.178.40–ல் நிலைகொண்டது. முந்தைய நாள் இறுதி நிலவரத்துடன் ஒப்பிடும்போது இது 0.39 சதவீதம் குறைவாகும்.

★ **ஸ்ரீ காளஹஸ்தி பைப்ஸ்** நிறுவனம் ஸ்மால் கேப் பிரிவைச் சேர்ந்தது. மும்பை சந்தையில், செவ்வாய்க்கிழமை வர்த்தகத்தின் இறுதியில் இந்நிறுவன பங்கின் விலை 1.01 சதவீதம் இறங்கி ரூ.347.05–ல் நிலைபெற்றது. கடந்த நிதி ஆண்டிற்கு (2016–17) மதிப்பீடு செய்துள்ள ஒரு பங்கு லாபத்துடன் ஒப்பிடும்போது இப்பங்கு விலை தற்போது 9.67 மடங்குகளாக இருக்கிறது. இப்பங்கிற்கான எதிர்கால இலக்கை ரூ.386–ஆக நிர்ணயித்துள்ள ரிலையன்ஸ் செக்யூரிட்டீஸ் நிறுவனம் வாங்கலாம் என பரிந்துரை செய்து இருக்கிறது.



**நிறுவனப் பங்குகள் பற்றிய பரிந்துரைகள் பங்குச்சந்தை வல்லுனர்களின் மதிப்பீடு அடிப்படையில் கொடுக்கப்படுகிறது. எனவே, பங்குகளில் முதலீடு செய்வோர் அந்த நேரத்தில் சந்தை நிலவரம் எவ்வாறு உள்ளது என்பதை ஆராய்ந்து தமது சொந்த முடிவுகளின் பேரில் அல்லது தமது முதலீட்டு ஆலோசகரின் அறிவுரையின்படி செயல்பட வேண்டும்.**